சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS: 42/2018

2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சங்கநாராாணணன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

03.11.2022

நான் இந்த வழக்கின் 2வது வாதி. என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வாதிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரம் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டா அசல் வா.சா.ஆ 1 ஆகும். பிரதிவாதிகளுக்கு வாதி தரப்பில் அனுப்பி வைத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ 2 ஆகும். அடமானக்கடன் கொடுப்பதற்கு முன்பாக தபசில் சொத்தினைப் பொறுத்து பெறப்பட்ட வில்லங்க சான்று சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ 3 ஆகும். தபசில் சொத்திற்கான தற்போதைய வில்லங்க சான்று கணினி நகல் வா.சா.ஆ 4 ஆகும். அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட சேதுலட்சுமியின் இறப்பு சான்று நகலை தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.5 ஆகும். அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட சேதுலட்சுமியின் வாரிசு சான்று நகலை தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.6 ஆகும். பிராதுப்படி

**தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்கு விசாரணை இல்லை.**